MyCARE

ஒவ்வொரு அடியிலும் எனக்குத் துணைநிற்கிறது



# “இன்சுலினை பாதுகாப்பாக வைப்பதற்கு

சில உதவிகரமான குறிப்புகளைப் பார்க்கலாம்.”

USV

இன்சுலினை
பயன்படுத்துவதற்கு முன்பு
**காலாவதி தேதியை பார்க்கவும்**
இந்த காலவதி தேதிக்கு பிறகு
எந்த ஒரு இன்சுலினையும்
**பயன்படுத்தக்கூடாது.**



சீல் செய்யப்பட்ட இன்சுலின் வயல்/பென்/கார்ட்ரிஜை **2° - 8° C வெப்ப நிலைக்கு இடையே குளிர்சாதன பெட்டியில்** வைக்கவும்.




**ஃப்ரீசர் -** 2° C க்கு கீழ் வெப்ப நிலையில் வைக்காதீர்கள்

**மிடில் ரேக் -** இன்சுலின் வைக்கும் பகுதியை சுத்தமாக வைக்கவும்

**வெஜிடபிள் ட்ரே -** 8° C க்கு அதிகமாக வெப்ப நிலையில் வைக்காதீர்கள்

வெயில்/கேர் கிளவ்
கம்பார்ட்மெண்டில்
(அதிக வெப்பமுள்ளது)
அல்லது ஃப்ரீசரில்
(அதிக குளிர்ச்சியானது)
**இன்சுலினை வைக்காதீர்கள்.**




**இன்சுலினை உறைய வைக்கக்கூடாது.**

தவறுதலா உறைய வைத்தால் இன்சுலினை எறிந்துவிடவும்.



இன்சுலின்
வைத்திருக்கும் முறையை
தயாரிப்பாளர் பரிந்துரையை
**கட்டாயம்**
**பின்பற்ற வேண்டும்.**




## இன்சுலின் வயல்/பென்னை ஒரு முறை திறந்துவிட்டால் (<30 C) அதை அறையின் வெப்ப நிலையில் வைக்கவும்.

அறையின் வெப்ப நிலையில் இதன் ஆயுள் 4 வாரங்கள்.





நீங்கள் தேதியை வயலில்/பென்னில் எழுதி பிறகு அப்புறப்படுத்தலாம்.


குளிர்சாதன பெட்டி இல்லை என்றாலோ மின்சார சப்ளை ஒழுங்காக இல்லை என்றாலோ **இன்சுலினை ஒரு குளிர்ச்சியான, காற்றோட்டமான மற்றும் இருட்டான இடத்தில்** வெயில் படாமல் வைக்கவும்.




இன்சுலினை
பயன்படுத்திய பிறகு
ஒவ்வொரு முறையும்
**பென்னிலிருந்து**
**ஊசியை நீக்கி**
இன்சுலின் கசியாமல்
வைக்கவும்.



பயணத்தின் போது **இன்சுலின் வயல்/பென்னை ஒரு பவுச்சில் கூலண்ட் ஜெல் பேக்கில் குளிர்ச்சியாக வைக்கவும்.** அல்லது சுற்றுச்சூழல் வெப்ப நிலை 30°C க்கு மேலிருகும் பட்சத்தில் ஒரு ஃபிளாஸ்கில் ஐஸைப் போட்டு அதற்குள் வைக்கவும்.




பயணத்தின் போது அதிக வெப்ப நிலையால் பாதிக்கப்படாமல் இருக்க **இன்சுலினை செக்-இன் பையில் வைக்காதீர்கள்.**



ஒவ்வொரு முறை இன்சுலினை பயன்படுத்துவதற்கு முன்பும் **வயலை உன்னிப்பாக கண்காணிக்கவும்.** இன்சுலினை சிரிஞ்ஜில் எடுப்பதற்கு முன்பு அது வழக்கம்போல இருப்பதை உறுதி செய்து கொள்ளவும். அதில் துகள்களோ அல்லது கிரிஸ்டல்ஸோ, ஃப்ராஸ்டிங் அல்லது நிறமாற்றம் காணப்பட்டாலோ இன்சுலினை அப்புறப்படுத்திவிடவும்.




**இவற்றை பார்க்கவும்:**
துகள்கள் அல்லது நிறமாற்றம்




**இவற்றை பார்க்கவும்:**
பிராஸ்டிங் அல்லது கிரிஸ்டல் அல்லது கட்டிதட்டுஅல் அல்லது சிறு துகள்கள்

**குறிப்பு:** வழக்கமான இன்சுலின்/கிளாஜைன் என்பது தெளிவான மற்றும் NPH/ப்ரீமிக்ஸ் இன்சுலின் கிளவுடியாக இருக்கும்.



ஞாபகம் இருக்கட்டும்
**இன்சுலினை பாதுகாப்பக வைப்பது மிகவும் அவசியம்**
ஏனென்றால் அதிக வெப்பம் அல்லது குளிரான வெப்ப நிலை இன்சுலினின் திறனை பாதிக்கும். அதன் செயல்பாட்டிற்கும் தடையாக இருக்கும்.

# MyCARE

ஒவ்வொரு அடியிலும் எனக்குத் துணைநிற்கிறது

## குறிப்பு


1. இன்சுலின் ஸ்டோரேஜ் அண்டு சிரஞ்ச் சேஃப்டி | ADA. Diabetes.org. (2022). 6 ஜூலை 2022 அன்று https://www.diabetes.org/healthy-living/medication-treatments/Insulin-other-injectables/Insulin-storage-and-syringe-safety. லிருந்து எடுக்கப்பட்டது.

2. சௌதரி, எஸ் மற்றும் சக்ரபோர்த்தி, பி.பி.(2017). எரர்ஸ் இன்சுலின் தெரப்பி; ரியல் லைஃப் எக்ஸ்பீரியன்சஸ் பிரம் டெவலப்பிங் வேர்ல்டு. ஜர்னல் ஆஃப் ஃபேமிலி மெடிசன் அண்டு பிரைமரி கேர், 6(4), 724-729. https://doi.org/10.4103/jfmpc.jfmpc_418_16

3. டேண்டன் என், கால்ரா எஸ், பல்ஹாரா ஒய்பி, பரூவா எம்பி, செட்டா எம், சந்தாலியா எச்பி, எட் அல். ஃபோரம் ஃபார் இன்ஜெக்ஷன் டெக்னிக் அண்டு தெரப்பி எக்ஸ்பர் ரெகமெண்டேஷன்ஸ், இந்தியா: தி இந்தியன் ரெகமண்டேஷன்ஸ் ஃபார் பெஸ்ட் பிராக்டீஸ் இன் இன்சுலின் இன்ஜெக்ஷன் டெக்னிக் 2017. இந்தியன் ஜே எண்டோக்ர் மெடாப் 2017;21:600-17.



**Disclaimer:**
"The guide/presentation/content/literature is for general information, guidance and educational purposes only and is not complete or exhaustive. The guide/ presentation/content/literature is not intended or implied to replace or substitute any current practice and or advice/guidance/diet provided by healthcare professionals. This guide/presentation/content/literature does not constitute any treatment/therapy/medication/diet/opinions for any patients who are on diabetes medication, the patients are required to prior consult their healthcare professional before acting on any change on treatment/therapy/ medication/diet and or opions. USV Private Limited makes no representations as to accuracy, completeness, correctness, suitability or validity of any information contained in this guide/presentation/content/literature and will not be liable for any losses, injuries or damages arising from its use."


பொது நலன் கருதி வெளியிடுவோர்: USV